ஆன்லைன் குரு

சீஸன் ஸ்பெஷல்

# அகிலம் முழுதும் சீடர்கள்!

எஸ்.வி.என்



கர்நாடக இசைக் கலைஞர் வித்யா சுப்பிரமணியன் அடிப்படையில் ஆடிட்டர். சி.ஏ. தேர்வில் இரண்டாவது இடத்தில் வந்து, தங்கப் பதக்கம் வென்றவர். தவிர அமெரிக்கா பாஸ்டன் கல்லூரியின் எம்.பி.ஏ. பட்டதாரி. இருந்தாலும், சில வருடங்களிலேயே இவரை இசை இழுத்து வந்தது இந்தியாவுக்கு.(கூடவே கணவரையும் தான்!)

அமெரிக்காவின் முக்கிய நகரங்களில் கர்நாடக இசை நிகழ்ச்சி வழங்கி, சொற்பொழிவுகள் நிகழ்த்தி, உரையாடல்களில் பங்குகொண்டு வந்தவர், இப்போது இசையை ரசிக்கக் கற்கும் முயற்சியை, ராக ரசிகா டாட் காம் மூலம், தேவேஷ் சத்யவலுவுடன் இணைந்து தொடங்கியிருக்கிறார்.

''ராகரசிகா டாட் காமில் கர்நாடக இசை பற்றிய பல விஷயங்கள் அலசப்படுகின்றன. நிறைய ரசிகர்கள் பங்குகொண்டு தங்களுடைய அனுபவத்தைத் தெரிவிக்கிறார்கள். 'குளோபல் கர்நாடிக் மியூசிக் லேர்னிங் அகடமி' என்று தொடங்கி, விரிவான பாடத் திட்டம் தயாரித்து இருக்கிறேன். இதன் மூலம் கர்நாடக இசை கற்றுக் கொள்பவர்கள் அமெரிக்கா, ஐரோப்பா, ஆசியா, ஆஸ்திரேலியா, நியூசிலாந்து ஆகிய நாடுகளில் வசிக்கிறார்கள். அட்வான்ஸ்ட் லெவல் தாண்டியவர்கள் சிலர் மேடை ஏறிவிட்டார்கள். சிலர் ஆசிரியர்களாகவே ஆகிவிட்டார்கள்!'' என்கிறார் வித்யா.

**ஸ்கைப் முறையைப் பயன்படுத்துகிறீர்களா?**

''இன்டர்நெட் மூலம் VOIP தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி, எலக்ட்ரானிக் டீச்சிங் டூல்ஸ் உதவியுடன் கற்றுக் கொடுக்கிறேன். கர்நாடக இசை ஆசிரியர்கள் நெட்வொர்க் அமைப்பு வாயிலாக ஆன்லைனில் சொல்லிக் கொடுக்கிறார்கள். தானாகவே கற்றுக் கொள்ளும் வகையில் முன்பே தயாரிக்கப்பட்ட சி.டி.க்களை அவர்களுக்குக் கொடுத்திருக்கிறோம். கற்பவரின் நேரம், அவர்கள் வசிக்கும் இடம் எல்லாவற்றுக்கும் ஏற்ற மாதிரி அவர்களுக்குக் கற்பிக்க முடிகிறது.''

**இந்த யோசனை எப்படித் தோன்றியது?**

''ஏழு வருடங்களுக்கு முன்னால் சில மாணவர்களுக்குக் கற்றுக்கொடுக்க ஆரம்பித்தேன். அப்புறம்தான் தெரிந்தது, ஆன்லைனில் கற்றுக் கொள்ள ஏகப்பட்ட டிமாண்ட் இருக்கிறது என்று! இதற்கு என் எம்.பி.ஏ. படிப்பும் உதவியது. வெறும் ஸ்கைப்பை வைத்துக்கொண்டு கம்ப்யூட்டர் முன்னால் உட்கார்ந்துகொண்டு பாடுவது மட்டும் போதாது. ஓர் ஆசிரியையாக, ஸ்பெஷலைஸ்ட் டெக்னிக் எவ்வளவு தேவை என்பதை உணர்ந்தேன். சிலருக்கு இசை ஞானம் இருந்தாலும், கற்றுத் தரும் வகையை அவர்கள் அறிந்திருக்கவில்லை.

என்னுடைய பணி, அவர்களைக் கண்டறிந்து, அவர்களுக்கு ஏற்றவாறு சிலபஸைத் தயாரிப்பது. கற்றுக்கொள்வது சிரமமாகவோ, பயமுறுத்துவதாகவோ இருக்கக் கூடாது. மாணவரின் லட்சியம் என்ன, தேவை என்ன என்பதை அறிந்து, அதற்கேற்றவாறு பயிற்சியைத் தயாரித்தேன்.''

**இப்போது உங்களுடன் நிறைய ஆசிரியர்கள் இருக்கிறார்களா?**

''என்னுடைய டீமில் இப்போது இருபது ஆசிரியர்கள் இருக்கிறார்கள். அவர்களையும் நான் ஆன்லைனிலேயே சந்தித்து, அவர்களுக்குத் தேவையான பயிற்சியை அளித்தேன். ஆர்வம்தான் முக்கியம். இப்போது சுமார் இருநூறு மாணவ மாணவிகள் எங்களிடம் கற்றுக்கொள்கிறார்கள். சிலருக்கு அசாத்திய திறமை இருக்கிறது. சிலர் நல்ல ரசிகராக இருக்க வேண்டும் என்று கற்றுக் கொள்கிறார்கள். முதலில் கர்நாடக இசை பற்றிய முன் அனுபவம் - எக்ஸ்போஷர் - இல்லை என்றால் கொஞ்சம் சிரமமாகத்தான் இருக்கும். ஆனால் கற்றுக்கொள்ள வேண்டும் என்ற நிஜமான ஆசை உள்ளவர்களுக்கு இது ஒரு தடை இல்லை. ஆச்சர்யம் என்னவென்றால், வருடம் தோறும் இவர்கள் எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டே வருகிறது என்பதுதான்! இது சந்தோஷத்தையும் தருகிறது.''



**வி**த்யா சுப்ரமணியம் அமெரிக்காவில் வசித்துவந்த போது, அங்குள்ள அரசின் பல ஆர்ட்ஸ் அமைப்புகளிலிருந்தும், கல்சுரல் கமிஷன்களிலிருந்தும் கிராண்டுகளும், பரிசுகளும் பெற்றிருக்கிறார். பல பல்கலைக் கழகங்களில் உரைகள், சொற்பொழிவுகள், பயிற்சிப் பட்டறைகள் நடத்தியிருக்கிறார். கர்நாடக இசை குறித்த ஆராய்ச்சிக் கட்டுரைக்காகவும் விருது பெற்றிருக்கிறார். கச்சேரி கேட்டு ரசிப்பது பற்றி இரண்டு டி.வி.டி-க்கள் சென்ற ஆண்டு வெளியிட்டார்.

